## சென்னை கிழக்கு மாவட்டத்தில் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் மனிதநேய விழா!

# 'தமிழ்நாட்டு விடியலுக்கான திராவிட விதை - முதல்வர் மு.க.ஸ்டாலின்!'

## கருணாஸ் பாடிய கவிதை!



சென்னை, மார்ச் 4-

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில் எழும்பூர் வடக்கு பகுதியில் "மனிதநேயம் - 28" பண்பாட்டு கலையை பறைசாற்றுவோம்! பயன்பாட்டு வழியை நிலைநாட்டுவோம்! எனும் தலைப்பில் 03.3.2026, செவ்வாய்கிழமை, மாலை: 6.00 மணி அளவில் சென்னை புரசைவாக்கம்தானா தெருவில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் எழும்பூர் வடக்கு பகுதி கழகச் செயலாளர் சொ. வேலு, எம்.சி தலைமையில் கலைமாமணி ட்ரம்ஸ் சிவமணி அவர்களும் மற்றும் வி.எம்.மகாலிங்கம் மதிச்சியம் பாலா, இசைவாணி ஆகிய பாடகர்கள் பங்கேற்ற மகேஷ் இன் ஷாமலா இசைக்குழுவினரின் மாபெரும் இசையரங்கத்தை திரைக்கலைஞரும் முக்குலத்தோர் புலிப்படை தலைவருமான கருணாஸ் துவக்கி வைத்து உரையாற்றி மக்கள் முதல்வரான தமிழ்நாட்டு முதல்வரைப் பாராட்டி கவிதை பாடினார்.

இவ்விழாவில் வி.சுதாகர், கே.எஸ்.ரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா, கே.எஸ்.எம் நாதன் புனிதவதி எத்திராஜ் எம்.சி, எஸ். மணிமுடி, ராஜேஸ்வரி ஸ்ரீதர் எம்.சி, கோ மணி, அ.நிர்மலா தேவி, ஜி தாமோதரன், நந்தீஸ்வரன், க. வினோத் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னாடிகள் செயல் வீரர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

கருணாஸ் அவர்களின் கவிதை வருமாறு:-

**காலம் முழுக்க**
**காலையில் எழும்**
**சூரியனைப் போல் இனி**
**வாழும் காலமெல்லாம்**
**ஆட்சியில் அமரப்போகும்..**
**எங்களின் ஓய்வறியா**
**உதயசூரியன்**
**அண்ணன் ஸ்டாலின்**
**அவர்களுக்கு..**

**இனிய பிறந்த நாள்**
**வாழ்த்துகள்!**

**அறிஞர் அண்ணா**
**திராவிட வயலை**
**உழுது**
**பண்படுத்தினார்!**

**முத்தமிழ் அறிஞர்**
**கலைஞர் அந்த**
**திராவிட வயலில் நல்ல**
**விதையை விதைத்தார்!**

**அந்த**
**நல்ல விதைதான்**
**இன்று நாடாளும்**
**அண்ணன்**
**ஸ்டாலின்!!**

**திராவிட விதை**
**ஒருபோதும் பதர்கள்**
**ஆவதில்லை! அது**
**நூற்றாண்டு கடந்தும்**
**விளையும்**
**வீரியமிக்க விதை!**

**இனியும்**
**தமிழ்நாட்டு**
**விடியலுக்காக**
**திராவிட விதை**
**விளையும்!!**

**திராவிட வயலுக்குள்**
**ரசாயன மருந்துகளை**
**எப்படியாவது**
**அடித்துவிடலாம்**
**என்றுதான்**
**ஆர்ப்பரிக்கிறது**
**ஆரியம் என்கிற**
**ஆர்.எஸ்.எஸ்.**
**சங்பரிவார பாஜக.!**

**ஆனால்..**
**தன்**
**கூரியமுனை**
**சூரியக் கதிரால்**
**குத்திக் கிழித்துவிடும்**
**திராவிடம்**
**என்பதை**
**மறந்துவிடாதீர்**
**மோடியாரே!**

**உங்கள்**
**மோடிமஸ்தான்**
**வேலையெல்லாம் எடப்**
**பாடியிடம்தான்**
**காட்டலாம்!**
**திராவிட ஸ்டாலினிடம்**
**காட்ட இயலாது**
**மாட்டிக் கொள்வீர்!**

**நாங்கள்**
**திராவிட மாடல்**
**திருவாரூர் தேரு!**
**இதில்**
**பா.ஜ.க.வாக இருந்தாலும்**
**பாகற்காயாக இருந்தாலும்**
**தேர்க்காலில் சிக்கினால்**
**உருத்தெரியாது**
**நசுங்கிவிடும்**
**மறந்து விடாதீர்!!**

**திராவிடமாடல் என்பது**
**சமூக நீதிமாடல்! அது**
**மக்களின் தேடல்**
**தேடலை அறிந்து**
**தேவையை**
**கொடுப்பதுதான்**
**திராவிட மாடல்!!**

**ஏட்டிக்குப்**
**போட்டி எடப்பாடி**
**நாக்குத்திடலில்**
**நடனமாடி....**
**அரியணை அரிப்புக்கு**
**அறிவிக்கிறார்**
**இன்ஸ்டால்மெண்டிலே**
**திட்டங்களை...**
**இனி..திட்டங்கள் மட்டுமா!**
**உங்கள் கொட்டமும்**
**அடங்கும் காலம் மீது!**

**நாக்கை நாப்பது**
**கிலோ மீட்டர்**
**நீட்டினாலும்**
**வாக்கை**
**வாங்க முடியாது!!**

**நாளை உங்கள்**
**நாணயமற்ற நாக்கையும்**
**சுளுக்கெடுப்பர் மக்கள்!!**
**ஐந்தாண்டு காலம்**
**தொடக்கம் முதல்**
**இன்று வரை**
**வாரி வழங்கும்**
**திராவிட வள்ளலாய்**
**வளர்ந்து நிற்கிறார்**
**அண்ணன் ஸ்டாலின்!**

**தமிழ்நாட்டின்**
**வளர்ச்சிப் பயணத்தில்**
**மகிழ்ச்சியூட்டும்**
**திட்டங்களை**
**அன்றாடம் அறிவிக்கிறார்**
**அண்ணன் ஸ்டாலின்!**

**திமுக**
**அழியா வரலாற்றை**
**அடைந்துவிட்டது! இனி**
**அது உதயநிதி கடந்தும்**
**உயரும்!!**

**ஒருவரையும்**
**பின்தங்க விட மாட்டோம்!**
**வெல்வோம் ஒன்றாக இது**
**நம்பிக்கை ஒளிவீசும்**
**முழக்கம்!!**

**எதிரிகளுக்குத்தான்**
**அன்றாடம் கலக்கம்!**

**தமிழ்நாடு முதல்வர்**
**அன்று அறிவித்தார்**
**ஐயாயிரம்**
**இன்று அறிவித்தார்!**
**ரெண்டாயிரம்**
**நாளையும்**
**அறிவிப்பார்!**
**முதியோர்,**
**மாற்றுத்திறனாளிகள்,**
**கைம்பெண்கள்,**
**திருநங்கையார்**
**மீனவர்கள்,**
**தேயிலைத்**
**தொழிலாளர்கள்**
**இவர்களின்**
**உதவித் தொகையுடன்**
**ரூபாய் இரண்டாயிரம்!!**
**வந்தடைந்துவிட்டது**
**வங்கியில்!**
**வாழ்க!! வாழ்க!! என**
**வாக்குச் செலுத்தி**
**வாழ்த்த இருக்கிறார்கள்!**

**விளிம்பு நிலை மக்களின்**
**இதயத்தில் நீங்கா**
**இடம் பிடித்துவிட்டார்**
**திராவிட முதல்வர்!**

**இப்போது**
**பா.ஜ.க. அதிமுக**
**மங்குணித்**
**தலைவர்களுக்கு**
**இந்தப்**
**பங்குனி வெயிலிலும்**
**குளிர்காய்ச்சல்**
**அடிக்கத்**
**தொடங்கிவிட்டது!**

**ஆம்!**
**அதிமுக கூடாரம்**
**காலியாகிவிட்டது!**
**வடை தூக்க**
**வாய் பிளந்த**
**பா.ஜ.க.**
**இப்போது**
**வாய்ப் பிழந்து நிற்கிறது!!**
**அதிமுக வெறும்**
**காலி பெருங்காய டப்பா!**
**அந்த டப்பா வண்டி**
**பழனிச்சாமி**
**பல்லிளித்து நிற்கிறார்!!**
**பரிதாபமாக நிற்கிறார்**

**மானமுள்ள**
**தலைவர்கள்**
**தாய்கழகத்திற்கு**
**வந்துவிட்டார்கள்!!**

**ஆனால்..**
**ஆளே இல்லாத**
**அதிமுக கடையில்**
**யாருக்கு டீ ஆத்துகிறார்**
**எடப்பாடி என்றுதான்**
**தெரியவில்லை!!**

**மோடியும்**
**அமித்ஷாவும்**
**அடிக்கடி இந்த**
**டீக்கடைக்கு வருகிறார்கள்**
**மொத்தமாக**
**கடையை**
**மூடப்போகிறார்கள்!**

**இனி**
**அனைத்திந்திய**
**அண்ணாதிராவிட**
**முன்னேற்றகழகம்**

**அனைத்திந்திய**
**பாரதீய ஜனதா**
**முன்னேற்றக் கழகமாக**
**முழுமையாக**
**மாறிவிடும்!!**
**முன்னாள்**
**முதலமைச்சர் எடப்பாடி**
**தேர்தல் முடிந்த**
**மறுநாளில்**
**வட்டச்செயலாளர்**
**வண்டுமுருகனாகி**
**விடுவார்!!**

**ஆமை புகுந்த வீடு**
**அழியும் என்பார்கள்**
**பா.ஜ.க புகுந்த கட்சி**
**என்னவாகி விடும்**
**என்பதை**
**எண்ணிப் பாருங்கள்!!**

**தயவு செய்து**
**நான் சொல்வதை**
**இனியாவது கேளுங்கள்..**
**அய்யா எடப்பாடியாரே**


**தாய்க்கழகம்**
**திமுகவுக்கே**
**வந்துவிடுங்கள்**
**தேர்தல் வேலையாவது**
**எளிதாகிவிடும்!**

**திமுக தலைவர்**
**உங்களை எந்த**
**பங்கமில்லாது**
**பாதுகாப்பார்!!**
**கவலையறிந்து**
**கஞ்சி ஊத்துவார்!!**

**நாளை**
**நாடும் நமதே**
**200 ம் நமதே!!**

**இன்னும்**
**ஒரிரு மாதங்களின்**
**மீண்டும்**
**முதல்வராய்**
**பிறக்கும் போகும்**
**அண்ணன்**
**மு.க.ஸ்டாலின்**
**அவர்களுக்கு**

**மீண்டும் எனது**
**பிறந்த நாள் வாழ்த்துகளை**
**தெரிவித்துக்**
**கொள்கிறேன்..**






உத்திரமேரூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட காஞ்சிபுரம் மாநகராட்சி 48வது வட்டத்தில் உத்தரமேரூர் சட்டமன்ற உறுப்பினர் நிதியில் இருந்து அதிநவீன வசதியுடன் நியாய விலை கடையை மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்எல்ஏ திறந்து வைத்தார். நாடாளுமன்ற உறுப்பினர் க. செல்வம், மாநகர செயலாளர் சி.கே.வி.தமிழ்ச்செல்வன், மேயர் திருமதி மகாலட்சுமி யுவராஜ், துணை மேயர் குமரகுருநாதன், பகுதி செயலாளர் அ . தசரதன், மாமன்ற உறுப்பினர் ரா. கார்த்திக் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

## சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் – சென்னை மாநகராட்சி சார்பில்

# ரூ.33.85 கோடியில் 11 முதல்வர் படைப்பகங்கள் - நவீன நூலகங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!




முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (3.3.2026) சென்னை, அசோக் நகரில் 7,874 சதுர அடி கட்டடப் பரப்பளவில் 12.74 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள முதல்வர் படைப்பகம் மற்றும் நவீன நூலகத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு, முனைவர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி, துணை மேயர் மு.மகேஷ்குமார், சென்னை மாநகர நூலக ஆணையக் குழு உறுப்பினர் கவிஞர் மனுஷ்ய புத்திரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**சென்னை, மார்ச் 4 -**

**சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் ரூ.33.85 கோடி செலவில் 11 முதல்வர் படைப்பகங்கள் மற்றும் நவீன நூலகங்களை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து,**

**பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் ரூ.10.96 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள முதல்வர் விளை யாட்டரங்கம், சென்னை நடுநிலைப் பள்ளிக் கட்டடம் மற்றும் அம்பேத்கர் கூட்டுறவு பண்டகச்சாலை நியாய விலைக் கடைகள் ஆகியவற்றை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.**

இதுகுறித்த அரசின் செய்திக் குறிப்பு வருமாறு:-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (3.3.2026) தியாக ராயநகர் சட்டமன்றத் தொகுதி, அசோக் நகரில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் 12.74 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள முதல்வர் படைப்பகம் மற்றும் நவீன நூலகத்தை திறந்து வைத்து, அசோக் நகர் முதல்வர் படைப்பகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக 16.87 கோடி ரூபாய் செலவில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் 9 முதல்வர் படைப்பகங்கள் கொண்ட நவீன நூலகங்கள் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் 4.24 கோடி செலவில் முதல்வர் படைப்பகம் கொண்ட நவீன நூலகம் ஆகியவற்றை திறந்து வைத்து, மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணித்தார்.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் 10 கோடியே 95 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள முதல்வர் விளையாட்டரங்கம், சென்னை நடுநிலைப் பள்ளிக் கட்டடம் மற்றும் அம்பேத்கர் கூட்டுறவு பண்டகச்சாலை நியாய விலைக் கடைகள் ஆகியவற்றையும் திறந்து வைத்தார்.

### அசோக்நகர் முதல்வர் படைப்பகம்!

சென்னை, அசோக் நகரில் 7,874 சதுர அடி கட்டடப் பரப்பளவில் தரைத்தளம், முதல் தளம் மற்றும் மாடிப்படி கூரைத்தளங்களுடன் குளிரூட்டப்பட்ட வசதியுடன் 12.74 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள முதல்வர் படைப்பகம் மற்றும் நவீன நூலகத்தை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்நூலகத்தின் தரைத்தளத்தில் வரவேற்பறை, குழந்தைகளுக்கான பிரத்தியேக நூலகக் கூடம், நூலகர் அறை, நாளிதழ் வாசிப்பு அறை, காத்திருப்போர் அறை, பிரதான வாசிப்பு மண்டபம், நூல்கள் வைப்பறை, புத்தக அலமாரிகள், நூல் வெளியீட்டு அரங்கம், தேநீர் விநியோகம், மின்சாதன கண்காணிப்பு அறை, மின்தூக்கி வசதிகள், ஆண், பெண் மற்றும் மாற்றுத்திறனாளி களுக்கான நவீனக் கழிப்பறை வசதி களும், முதல் தளத்தில், முதல்வர் படைப்பகம், கணினி அறை, கூட்டரங்கம், போட்டித் தேர்வு மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு, அலுவலக அறை, நூல் வாசிப்பு அரங்கம், நூலகம், புத்தக அலமாரிகள், புத்தக வைப்பறை, எறிகருவி படங்காட்டி திறன் அறை, ஆண், பெண் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான நவீனக் கழிப்பறை வசதிகள், திறந்தவெளித் தளத்தில், மேல்மட்ட உயரப்பகுதி, மின்தூக்கி அறை கூரை, 2000 லிட்டர் கொள்ளவு கொண்ட மேல்நிலை குடிநீர் தொட்டி உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது.

மேலும், இப்படைப்பகத்தின் சுற்றுப்புறத்தில், திறந்தவெளி அரங்கம், அவசரகால வெளியேறும் வழி, 16,200 லிட்டர் கொள்ளவு கொண்ட தரைத்தள நீர் தேக்கத் தொட்டி, பசுமைத் தோட்டம், நடைபாதைக் கற்கள், கண்காணிப்பு கேமராக்கள் மற்றும் ஸ்பீக்கர் உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது.

### காணொலி காட்சி வாயிலாக திறக்கப்பட்ட 10 முதல்வர் படைப்பகங்கள்!

அசோக் நகர் முதல்வர் படைப்பகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக வட சென்னை வளர்ச்சி திட்டத்தின் கீழ், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் **திரு.வி.க. நகர் சட்டமன்றத் தொகுதியில்** உள்ள ஓட்டோரி, சுப்புராயன் தெருவில் 3.05 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள முதல்வர் படைப்பகம் மற்றும் நவீன நூலகம், ஜமாலியா, மங்களபுரத்தில் 2.25 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள முதல்வர் படைப்பகம் மற்றும் நவீன நூலகம், புளியந்தோப்பு, வெங்கடேசபுரத்தில் 1.28 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள முதல்வர் படைப்பகம் மற்றும் நவீன நூலகம், பட்டாளம், பக்தவச்சலம் பூங்காவில் 2.22 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள முதல்வர் படைப்பகம் மற்றும் நவீன நூலகம்;

**ஆர்.கே.நகர் சட்டமன்றத் தொகுதி**, மேயர் பாசுதேவ் தெருவில் 1.20 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள முதல்வர் படைப்பகம் மற்றும் நவீன நூலகம்; **எழும்பூர் சட்டமன்ற தொகுதி**, சூளை, இராட்லர் தெருவில் 82 இலட்சம் ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்டுள்ள முதல்வர் படைப்பகம் மற்றும் நவீன நூலகம்; **பெரம்பூர் சட்டமன்ற தொகுதி**, எருக்கஞ்சேரியில் 1 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்டுள்ள முதல்வர் படைப்பகம் மற்றும் நவீன நூலகம்; **இராயபுரம் சட்டமன்றத் தொகுதி**, சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் நினைவிடத்தில் 1.56 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்டுள்ள முதல்வர் படைப்பகம் மற்றும் நவீன நூலகம் மற்றும் **மயிலாப்பூர் சட்டமன்றத் தொகுதி**, ராஜா அண்ணாமலைபுரத்தில் 3.49 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள முதல்வர் படைப்பகம் மற்றும் நவீன நூலகம் என **9 முதல்வர் படைப்பகம் மற்றும் நவீன நூலகங்கள்;**

**பெருநகர சென்னை மாநகராட்சி** சார்பில் துறைமுகம் சட்டமன்றத் தொகுதி, கொண்டித்தோப்பு, அம்மன் கோயில் தெருவில் துறைமுகம் சட்டமன்ற உறுப்பினர் நிதி மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி நிதியிலிருந்து 4.24 கோடி ரூபாய் செலவில் சென்னை நடுநிலைப் பள்ளியில் புதியதாக கட்டப்பட்டுள்ள முதல்வர் படைப்பகம் மற்றும் நவீன நூலகம்;

என மொத்தம் 16.87 கோடி ரூபாய் செலவில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் 9 முதல்வர் படைப்பகங்கள் கொண்ட நவீன நூலகங்கள் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் 4.24 கோடி செலவில் 1 முதல்வர் படைப்பகம் கொண்ட நவீன நூலகம் ஆகியவற்றை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்து, மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணித்தார்.

**பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் கட்டப்பட்டுள்ள முடிவுற்ற பணிகளை திறந்து வைத்தல்**

### அம்பேத்கர் கூட்டுறவு பண்டகச்சாலை நியாய விலைக் கடைகள்!

பெருநகர சென்னை மாநகராட்சி, திரு.வி.க. நகர் மண்டலம், ராஜா தெருவில் மாநகராட்சி மூலதன நிதியின் கீழ் 34.70 இலட்சம் ரூபாய் செலவில் 1,206 சதுர அடி பரப்பளவில் புதிதாக கட்டப்பட்டுள்ள அம்பேத்கர் கூட்டுறவு பண்டகச்சாலை நியாய விலைக் கடைகளை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார். புதிதாக திறந்து வைக்கப்பட்டுள்ள நியாய விலைக் கடைகள் மூலம் மொத்தம் 2,311 குடும்பங்கள் பயனடையும் என்பது குறிப்பிடத்தக்கது.

### முதல்வர் விளையாட்டரங்கம்

பெருநகர சென்னை மாநகராட்சி, திரு.வி.க. நகர் மண்டலம், லோகோ ஸ்கீம் 1வது தெருவில் சிங்கார சென்னை 2.0 திட்ட நிதி மற்றும் மாநகராட்சி மூலதன நிதியின் கீழ் 2.97 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள முதல்வர் விளையாட்டரங்கத்தை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார். இந்த உள்விளையாட்டரங்கம் 22,560 சதுர அடி பரப்பளவில் குத்து சண்டை மேஜை, குத்து சண்டை உபகரணங்கள், வர்ணம் பூசுதல், மின்விளக்குகள், கழிவறை வசதிகள், கூடைப் பந்து மைதானம், பிக்கில் பால் மைதானம், நடைபாதை, செயற்கை தரை, சுற்றுப்புறச் சுவர், திறந்த வெளி உடற்பயிற்சி உபகரணங்கள், பசுமைப் படுத்துதல் உள்ளிட்ட அனைத்து வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது.

### சென்னை நடுநிலைப் பள்ளிக் கட்டடம்!

பெருநகர சென்னை மாநகராட்சி, திரு.வி.க. நகர் மண்டலம், கபிலர் தெருவில் மாநகராட்சி மூலதன நிதியின் கீழ் 7.64 கோடி ரூபாய் செலவில் சென்னை நடுநிலைப் பள்ளிக்காக கட்டப்பட்டுள்ள புதிய கட்டடத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார். இப்பள்ளிக் கட்டடமானது தரைத் தளம், முதல் தளம் மற்றும் இரண்டாம் தளத்துடன் 5,016 சதுர அடி பரப்பளவில் 17 வகுப்பறைகள், அரங்கம், 15 கழிப்பறைகள் உள்ளிட்ட அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் முனைவர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, மேயர் திருமதி. ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஜெ.கருணாநிதி, ஆர்.டி.சேகர், ப.தாயகம் கவி, ஜெ.ஜெ.எபிநேசர், இ.பரந்தாமன், துணை மேயர் மு.மகேஷ்குமார், சென்னை மாநகர நூலக ஆணையக் குழு உறுப்பினர் கவிஞர் மனுஷ்ய புத்திரன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, பள்ளிக் கல்வித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் பி.சந்தரமோகன், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் கோ.பிரகாஷ், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், பொது நூலக இயக்குநர் திருமதி ச.ஜெயந்தி, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும முதன்மை செயல் அலுவலர் சந்திரசேகர் சாகமூரி,

மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையாளர் எச்.ஆர்.கௌஷிக், மாநகராட்சி வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, பள்ளிக்கல்வி இயக்குநர் முனைவர் ச.கண்ணப்பன், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப.ரங்கநாதன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




பல்லாவரம் சட்டமன்றத் தொகுதியில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாள் விழா திராவிட மாடல் அரசின் 5 ஆண்டு சாதனைகள் விளக்க மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத் திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி மாவட்டக் கழகத் துணைச் செயலாளர் இ. கருணாநிதி எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் தமிழ்நாடு பாடநூல் நிறுவன கழக தலைவர் திண்டுக்கல் ஐ. லியோனி சிறப்புரை ஆற்றினார். கழக தீர்மானக் குழு செயலாளர் மீ.அ. வைத்தியலிங்கம், துணை மேயர் கோ. காமராஜ், மண்டல தலைவர் வே.கருணாநிதி, பகுதி கழகச் செயலாளர்கள் த. ஜெயக்குமார், ஏ.கே. கருணாகரன், இ.எஸ்.பெர்னார்ட், பொதுக்குழு மூ.ரஞ்சன், தகவல் தொழில்நுட்ப அணி தமிழ்மாறன், கோல்டு டி.பிரகாஷ், எல். பிரபு, அணிகளின் துணை அமைப்பாளர்கள், பகுதி கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.